**100 % வாக்களிக்க உறுதி செய்வோம்!**
**ENSURE 100% VOTING!**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 15** **நாள்: 23.03.2019**

**சென்னை மாவட்ட தேர்தல் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பினை பார்வையிட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் பறக்கும் படை குழுக்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தில் உள்ள 3 நாடாளுமன்ற தொகுதிகளுக்கும், எண்.12 பெரம்பூர் சட்டமன்ற தொகுதிக்கும் (இடைத்தேர்தல்) நடைபெறும் தேர்தலை முன்னிட்டு, மத்திய, மாநில அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்கள் தேர்தல் பணி அலுவலர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு இன்று 24.03.2019 (ஞாயிற்றுக்கிழமை) துவங்கி சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்ற தொகுதிகளில் அமைந்துள்ள 16 மையங்களில் நடைபெற்று வருகிறது. மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் பெரம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வியாசர்பாடி சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பினை பார்வையிட்டு அறிவுரைகள் வழங்கினார்கள்.

பின்னர் செய்தியாளர்களிடம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது :

சென்னை மாவட்டத்தில் 20,271 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு 16 மையங்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளும் அலுவலர்கள் அனைவருக்கும் அவர்களது விவரங்கள் அடங்கிய தகவல் குறிப்பு படிவம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தபால் வாக்கு தொடர்பான ஆவணங்கள் மற்றும் பயிற்சி கையேடுகள் இவ்வகுப்புகளில் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி வகுப்புகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கை இயந்திரம் (VVPAT) ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து செயல்முறை விளக்கமும் அளிக்கப்பட உள்ளது.

இவர்களுக்கான அடுத்தக்கட்ட பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 07.04.2019 (ஞாயிற்றுக்கிழமை) 14.04.2019 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 17.04.2019 (புதன்கிழமை) அன்றும் நடைபெற உள்ளது.

சென்னை மாவட்டத்தில் 48 பறக்கும் படை குழுக்களின் எண்ணிக்கையானது 144ஆக அதிகரிக்கப்பட்டு கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. 23.03.2019 வரை பறக்கும்

படை மற்றும் நிலைக்கண்காணிப்பு குழுக்களால் 1 கோடியே 38 இலட்சத்து 170 ரூபாய் ரொக்கப்பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், தகுந்த ஆவணமின்றி கொண்டு செல்லப்பட்ட 13.04 கிலோ கிராம் தங்கம் 86.21 கிலோ கிராம் வெள்ளி, 950 கைப்பேசிகள் மற்றும் 1500 மெமரி கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாவட்டத்தில் உள்ள 3,754 வாக்குச்சாவடிகள் மற்றும் 72 துணை வாக்குச்சாவடிகளில் பணிபுரிய சுமார் 24,000 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். வாக்குப்பதிவிற்காக 10,791 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 5,298 கட்டுப்பாட்டு கருவிகளும், 6,548 VVPAT இயந்திரங்களும் தயார் நிலையில் உள்ளன.

அரசுக் கட்டடங்கள் மற்றும் பொது இடங்களில் 11,800 விளம்பரங்களும், தனியார் இடங்களில் 12,333 விளம்பரங்களும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், தேர்தல் நடத்தை விதிமீறல்கள் தொடர்பாக 68 புகார்கள் காவல்துறையிடம் பதியப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், வடசென்னை பாராளுமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர்/வட்டார துணை ஆணையாளர் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., பெரம்பூர் தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.எஸ்.கருணாகரன், பயிற்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**